**லாஹுகல பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 சனவரி 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லாஹுகல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 49,926 பெறுமதியான நூலக புத்தகங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சகல நூலக புத்தகங்களும் மூலதனமாக்கப்பட வேண்டும். | தற்போது புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 285,000 தொகையான உறுப்பினர் படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உறுப்பினர் படிகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 285,000 தொகை கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அந்த செயற்பாடுகள் சரி செய்யப்படும். |
| (iii) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 285,000 உறுப்பினர் படிக்காக கணக்குகளில் நிதி ஏற்பாட ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உறுப்பினர் படிக்காக ரூபா 285,000 தொகையொன்று 101 A இன் கீழ் பாதீட்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 90,459,889 தொகையான 03 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 2,424,152 தொகையான ஒரு பொறுப்பு விடயம் என்பவற்றின் கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக முறையான வகையில் தகவல்களை கண்டறிய முடியாமல் உள்ளது. எதிர்காலத்தில் கண்டறிவதற்கான முயற்சி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 217 | - | சபைக்குச் சொந்தமான மற்றும் சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற காணிகளை கையேற்று மதிப்பீட்டு பெறுமதி நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப் படவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச செயலகத்தினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவுடன் மதிப்படப்பட்டு நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | 22,500 | கெப் வண்டி 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 1,253,612 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடரபாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வைப்புக்களுக்குரிய தகவல்களை கண்டறிய முடியாமல் உள்ளது. எதிர்காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சுபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது எரிபொருள் பரிசோதனைக்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | உத்தியோகத்தர்களின் வரவுகள் மற்றும் வெளிச் செல்கைகளை பதிவிடுவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கைவிரல் அடையாள இயந்திரத்தை இந்த ஆண்டின் போது ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,597,744 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 212,437 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வங்கி நிடைமுறைக் கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்களில் நீண்ட காலமாக காசேட்டின் மீதிக்கு சேர்த்தலாக | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

சீராக்கப்பட்டிருந்த ரூபா 69,609 தொகை மற்றும் குறைத்தல்களாக சீராக்கப்பட்டிருந்த ரூபா 52,776 தொகை என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகை | 2,102,000 | 1,142,837 | 1,142,837 | 200 | 1,602,000 | 1,297,112 | 1,297,112 | 200 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 215,000 | 285,360 | 285,360 | 26,563 | 230,000 | 215,000 | 215,000 | 26,563 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,325,000 | 4,296,001 | 3,731,616 | 564,359 | 2,000,000 | 1,169,200 | 1,169,200 | - |
| | | **3,642,000** | **5,724,198** | **5,159,813** | **591,122** | **3,832,000** | **2,681,312** | **2,681,312** | **26,763** |

### 2.3.2 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் ஒரு தொலைபேசி கோபுரத்திற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு ஆகக் குறைந்தது ரூபா 20,000 வீதம் அறவிட வேண்டியிருந்த போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 08 தொலைபேசி கோபுரங்களில் ரூபா 160,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தொலைபேசிக் கோபுரங்களில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 564,359 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | தற்போது உப விதிகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடத்திற்காகவும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட 07 பதவிகளுக்காக 12 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இந்த பதவியணியினர் வெற்றிடம் தொடர்பான பிரச்சினைகள் பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுவதுடன் பல சந்தர்ப்பங்களின் போது மேல்மட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையில் சேவையாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 8,000 தொகையான ஊழியர் கடன் மீதி 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 21 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களில் 09 வாகனங்கள் பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும் அந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்காமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் குறைந்த வருமான நிலைமை இதற்கு காரணமாகும். |

#### 3.3.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 21 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களில் 13 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபையின் பெயரில் கையேற்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 பெறுகைகள்

#### பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்திற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |